இணைப்பு I

24ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 209-க்கான விடையைக் காண்க.]

(ஆ) திருக்கோயிலூர் கூட்டுறவு நகர வங்கி ஊழியர்கள் கூட்டுறவுச் சங்கத்தின் நடைமுறை சரியில்லாத காரணத்தினால் பதிவாளரால் தமிழ்நாடு கூட்டுறவுச் சட்டம் 65 ஆம் பிரிவின் கீழ் விசாரணை செய்ய தனி விசாரணைக்குழு அனுப்பப்பட்டது. விசாரணையின்போது கீழ்க்கண்ட ஒழுங்கீனங்கள் கண்டு பிடிக்கப்பட்டன:—

	ரூபாய்.
(1) 17–9–1975-ல் உறுப்பினர்களுக்கு அனுமதியின்றி அலாரம் டைம்பீஸ் இலவசமாக வழங்கியது	956.00
(2) 3–1–1977-ல் எவர்சில்வர் டிபன் கேரியர் உறுப்பினர்களுக்கு அனுமதியின்றி இலவசமாக வழங்கியது	1,746.00
(3) 29–11–1977-ல் இரும்பு நாற்காலிகள் உறுப்பினர்களுக்கு அனுமதியின்றி இலவசமாக வழங்கப்பட்டது.	1,848.00
(4) துணி கடனாக வெளியூரார்களுக்கு கணக்கில் இல்லாமல் அனாமத்தாக கடன் கொடுத்தது	5,000.00
(5) சங்க முன்னாள் விற்பனையாளர் காப்புத் தொகை திரும்பக் கொடுத்தது (வவுச்சர் இல்லாதது—வட்டி உள்பட)	1,080.00
(6) சங்கத் தலைவர் பொய்க் காரணங்களைக் காட்டி பயணப் படி எடுத்தது ..	138.55
மொத்தம் ..	10,769.15

(இ) மேற்படி முறைகேடான செலவினங்களில் வரிசை எண் 1 முதல் 4 முடியவுள்ள தொகைகளுக்கு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் பிரிவு 71-ல் கீழ் தண்ட நடவடிக்கை எடுக்கப் பட்டு சங்க நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கு எதிராக ரூ. 9,550.60-க்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது. இந்தத் தொகையினை வசூல் செய்ய திருக்கோவிலூர் கூட்டுறவுச் சங்கங்களின் துணைப் பதிவாளர் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்.

[1981 மார்ச் 2

வரிசை எண் 5 மற்றும் 6 தொடர்பான கையாடல்கள் குறித்து உளுந்தூர்பேட்டை சப்-டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் சங்கத்தின் தலைவர் மற்றும் மேலாளர் ஆகியோர் மீது கிரிமினல் வழக்கு தொடரப்பட்டு, வழக்கு நீதி மஸ்றத்தின் விசாரணையிலிருந்து வருகிறது. வழக்கு விசாரணை இன்னும் முடியவில்லை.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS